9th August 1963]

திரு. இராம. அரங்கண்ணல் : அடுத்த பொங்கலுக்காவது காவேரி நீர் சென்னைக்குக் கிடைக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் பொங்கலுக்குள்ளாக அப்படி விசேஷமாக என்ன செய்யப் போகிறார் என்று சொன்னால், அதற்குள் அரசாங்கம் சென்னைக்கு எப்படியாவது தண்ணீர் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கும்.

Master-Plan for Madras City

* 75 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have sanctioned a scheme for the investigation and preparation of a master-plan for the Madras city; and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :

(அ) ஆம்.

(இ) சென்னைமாநகர் நகரப் பகுதிக்கு மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிப்பதற்காக மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் திட்டம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. முதல் நிலையில், சென்னை மாநகர்ப் பகுதிக்குத் தோராயமான அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்து, முடிவில் விரிவாக மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்கு ஆரம்ப நிலையில் தேவைப்படும் பணியாளர்களை அமர்த்திக்கொள்ளவும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்காக பூர்வாங்கப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. 1967-ம் ஆண்டு இறுதிக்குள் மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

*80-அ கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) யேல் பல்கலைக் கழக நகர அபிவிருத்தி பேராசிரியர்களான வால்டர் ஹாரிஸ், நிப்ஸன் ட்யூன்ஸ் ஆகியோரிடமிருந்து சென்னை மாநகரம் பற்றி ஏதாவது ஒரு மாஸ்டர் பிளான் அரசிடம் ஒப்படைக்கப்பட்டதா ?

(இ) அந்த அறிக்கையின் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) The report furnished by the team of American Experts headed by Mr. Waltern Harris does not contain any master-plan as such for the Madras City, but it envisages the establishment of an Institute of Planning for Post-Graduate education in Town and Country Planning. The preparation of the master-plan for the Madras City will be undertaken by that institute on its formation.

[9th August 1963

(b) The Government are examining the details connected with the establishment of the Planning Institute recommended by the American Expert team. It is estimated to cost Rs. 9.00 lakhs of rupees non-recurring and Rs. 2.40 lakhs per annum recurring.

திரு. கே. ஏ. மதியழகன் : வளரும் சென்னை நகரத்துடன் ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு திருவொற்றியூர், ஆவடி, பூந்தமல்லி தாம்பரம் ஆகியவற்றை இணைத்து, ஒன்று சேர்த்து விருத்தி செய்கிற திட்டத்தை இந்த சர்க்கார் யோசிக்குமாறு கூறுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்விக்கு ஆராய்ந்து தான் பதில் கூறமுடியும்.

திரு. மு. கருணாநிதி : ஏற்கெனவே ஏராளமான செலவில் தயாரிக்கப்பட்ட மாஸ்டர் பிளான் இருக்கிறதே, அது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்குத் தனிக் கேள்வி போடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னையைச் சுற்றியுள்ள சுமார் 140-க்கு மேற்பட்ட கிராமங்களை சென்னை மாநகரத்தோடு இணைக்க வேண்டும் என்ற யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறதா ? அது எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரி ஆலோசனை தற்பொழுது ஒன்றுமில்லை.

தெரு நாய்கள்

* 76 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தெருக்களில் திரியும் நாய்களைப் பிடிக்க ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா ? விவரமென்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Rules have been framed under the Madras Panchayats Act, 1958, and District Municipalities Act, 1920, for licensing of dogs and destruction of unlicensed dogs in Panchayat areas and Municipal areas respectively. The Director of Public Health has also issued instructions in August 1962 urging the necessity to eliminate the stray dog population with a view to preventing the outbreak of rabies.

Handloom cloths (Export)

* 77 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether we have lost any foreign market for our handloom cloths due to sub-standard and underweighed goods having been exported ; and